# வன்முறையைத் தூண்டும் வந்தே மாதரம்!

ஆளுநர் மாளிகையில் நடைபெறும் பதவி ஏற்பு விழாக்களில் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து அவமதிக்கப்படுவதையும், வந்தே மாதரம் பாடல் முதலில் இசைக்கப் படுவதையும் பார்க்கிறோம். தமிழ்த்தாய் வாழ்த்தினை அவமதிப்பதன் மூலம், தமிழ்நாட்டையும், தமிழர்களையும் அவமதிக்கிறார்கள் என்பதுதான் உண்மை !

“நாங்கள் மறுப்பு தெரிவித்தோம். ஆனாலும், ஆளுநர் மாளிகையில் விழா நடைபெறுவதால், அந்த மரபைத்தான் பின்பற்றுவோம்” எனக் கூறி விட்டார்கள் என்கிறார் ஓர் அமைச்சர்! ஆளுநர் மாளிகை எங்கே இருக்கிறது....? உத்தரப்பிரதேசத்திலா, பீகாரிலா? தமிழ்நாட்டில்தானே இருக்கிறது! தமிழ்நாட்டில் நடக்கும் ஒரு விழாவில், தமிழையும், தமிழர்களையும் அவமதிக்க அனுமதிப்பது எப்படிச் சரியாகும்?

இது ஒருபுறமிருக்க, முதலில் பாடப்படும் வந்தே மாதரம் பாடலின் வரலாறு என்ன, அது தேச விடுதலைக்கு அல்லது தேச ஒற்றுமைக்கான பாடலா என்பதையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது!

வங்காளத்தைச் சேர்ந்த பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்பவரால் 1882 இல் எழுதி வெளியிடப்பட்ட, “ஆனந்த மடம்” என்னும் நூலில் இடம் பெற்றிருக்கும் பாடலே இந்த வந்தே மாதரம்!

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற, இஸ்லாமியர்களுக்கு எதிரான, சன்னியாசிகளின் புரட்சி என்னும் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டே அந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது!

இந்துமத வைணவத் துறவியான சத்யானந்தா, பிற துறவிகளுடன் இணைந்து, இஸ்லாமியரிடமிருந்து வங்காளத்தைக் கைப்பற்றுவதற்கான வன்முறைப் போராட்டங்களைக் கையில் எடுக்கிறார். அவர் கைது செய்யப்பட்ட பிறகு, அவருடைய சீடர் பவானந்தா அந்த வன்முறைப் போராட்டத்தைத் தொடர்கிறார்!

இஸ்லாமியர்களின் மீது அவர்கள் தொடுத்த ஆயுதப் போராட்டத்தில், இஸ்லாமியர் பலர் படுகொலை செய்யப்படுகிறார்கள். அந்த நேரத்தில், இந்து சன்னியாசிகள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அப்போது அவர்கள் பாடும் பாடல்தான் வந்தே மாதரம்! அதனை “ஆனந்த கீதம்” (Abbey of bliss) என்று அழைக்கிறார் பங்கிம் சந்திர சாட்டர்ஜி!

அந்தப் பாடலின் முதல் இரு பத்திகள் (paragraphs )பொதுவானவையாக இருந்தாலும், அடுத்தடுத்து வரும் சரணங்கள் அனைத்திலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான குரல் ஓங்கி ஒலிக்கிறது!

இதன் காரணமாக இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே, இந்தப் பாடலைப் பாடுவதற்கு முஸ்லிம் லீக் கட்சியினரும், மதச்சார்பின்மையை வலியுறுத்தும் ஜனநாயகவாதிகளும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் இந்தியா என்பது இந்துப் பெண் தெய்வங்களான துர்க்கை, லட்சுமி ஆகியோரோடு சமமாக வைத்துப் பேசப்படுகிறது! (Tvah hi Durga Dashapraharana Dharamini)

இதனையொட்டி, அந்தப் பாடலைக் காங்கிரஸ் கூட்டங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் பாடலாமா என ஆராய்வதற்கு, 1937 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், நேரு தலைமையிலான ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் சுபாஷ் சந்திர போஸ், அபுல் கலாம் ஆசாத், ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அக்குழு “வந்தே மாதரம் பாடலில், முதல் இரண்டு பத்திகளை மட்டும் வேண்டுமானால் பாடலாம். கீழே வரும் பகுதிகள் இஸ்லாமியர்களுக்கு எதிராக இருப்பதால், அவற்றைப் பாட வேண்டியதில்லை என்று அறிவித்தது!

1938 ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, சட்டமன்ற அவைத் தலைவர் புலுசு சாம்பமூர்த்தி அந்தப் பாடலை பாட அனுமதித்தார். அப்போதும் அதனை எதிர்த்து முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்!

ஆனந்த மடம் நாவலின் எட்டாவது அத்தியாயத்தில், முஸ்லிம்களைக் கொல்லுங்கள் என்று ஒரு முழக்கம் வருகிறது அதைத் தொடர்ந்து வந்தே மாதரம் பாடல் பாடப்படுகிறது!

இது மட்டுமல்லாமல், அந்தப் பாடலை எழுதிய பங்கிம் சந்திர சாட்டர்ஜி, “ஆங்கிலேயர்களின் உதவியோடு நாம் முஸ்லிம்களை வேரறுக்க வேண்டுமே அன்றி, ஆங்கிலேயர்களை எதிர்க்க வேண்டியது இல்லை” என்றும் வெளிப்படையாகக் கூறியவர்! எனவே வந்தே மாதரம் என்பது தேச விடுதலைக்கான பாடலோ, தேச ஒற்றுமைக்கான பாடலோ இல்லை என்பது தெளிவாகிறது!

உண்மைகள் இவ்வாறிருக்க, கடந்த நவம்பர் மாதம் முதல் ஓராண்டிற்கு எல்லா அரசு விழாக்களிலும் வந்தே மாதரம் பாடலை முதலில் பாட வேண்டும் என்று பிரதமர் மோடி சொல்லி இருப்பதை, இங்கே இருக்கிற ஆளுநர்கள் வேண்டுமானால் தலையில் வைத்துக் கொண்டாடலாம்! ஆனால் தமிழர்கள் ஒரு நாளும் இதனை ஏற்க மாட்டார்கள்!

வந்தே மாதரம் என்பது வாழ்த்துப் பாடல் இல்லை, மத ஒற்றுமைக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் பாடல்!



சுப. வீரபாண்டியன்




இந்தக் கழனியைக்
காத்திட வந்து கொண்டே இருக்கும்
இளைய தலைமுறைப் பட்டாளம்!
வளர்ந்து கொண்டே இருக்கும் இந்த
ஜனநாயகப் பாசறை!
வலிமை பெற்றுக் கொண்டே இருக்கும்
பெரியார், அண்ணா இலட்சியம்!
- தலைவர் கலைஞர்

### கடந்தகால ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைத் திட்டங்களை

# மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக் கல்வித்துறை!

## திருப்பூர் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை மந்தம்!

திருப்பூர், மே 23-

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக்கல்வித்துறையால் திருப்பூரில் அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கையில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 2026-27ம் கல்வி ஆண்டிற்கான அரசு பள்ளி மாணவ, மாணவியர் சேர்க்கை நடவடிவக்கைகளில் கல்வித்துறை போதிய ஆர்வம் காட்டவில்லை என்றும், இதனால் சேர்க்கை மந்தமாகும் சூழல் நிலவுவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க பல்வேறு அதிரடி முன்னேற் பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பாக, அரசு சார்பில் மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் சீருடைகள் மற்றும் சைக்கிள் வழங்கும் திட்டங்கள் குறித்தும், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டம் குறித்தும் விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

மேலும், அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கும் நான் முதல்வன் திட்டம், தமிழ் வழியில் கல்வி பயின்ற மாணவ, மாணவியர்களுக்கான 20 சதவீத இடஒதுக்கீடு, அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான 7.5 சதவீத மருத்துவக்கல்வி இடஒதுக்கீடு மற்றும் மாணவர்களின் சிந்தனையை தூண்டும் அறிவியல் சுற்றுலா உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பேனர்கள் அரசு பள்ளிகளின் முன்பாக பிரம்மாண்டமாக வைக்கப்பட்டன. இந்த திட்டங்களால் ஈர்க்கப்பட்டு தனியார் பள்ளிகளுக்கு நிகராக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்க்க ஆர்வம் காட்டினர். இதனால், கடந்த ஆண்டுகளில் திருப்பூர் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை கணிசமாக உயர்ந்தது.

ஆனால், நடப்பு 2026 27ம் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், திருப்பூரில் உள்ள பெரும்பாலான அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கையை அதிகரிப்பதற்கான எந்தவித

விழிப்புணர்வு பேனர்களோ அல்லது முறையானமுன்னேற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை. கல்வித்துறையும், பள்ளி நிர்வாகங்களும் மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்துவதில் போதிய ஆர்வம் காட்டாத நிலை நீடிக்கிறது. மார்ச் 1ம் தேதி அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடங்கிய நிலையில், இரண்டு மாதங்களாக திருப்பூர் மாவட்டம் முழுவதும் உள்ள 14 ஒன்றியங்களிலும் சேர்த்து இதுவரை வெறும் 3,500 முதல் 3,700 வரையிலான மாணவ, மாணவியர்கள் மட்டுமே அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். அரசு பள்ளிகளின் உள் கட்டமைப்பு மற்றும் தமிழக அரசின் கல்வி நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, மாணவ, மாணவியர்கள் சேர்க்கையை உடனடியாக தீவிரப்படுத்த மாவட்ட நிர்வாகமும், கல்வித்துறையும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### உழைப்பாளிகளின் தலைவர்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியோடு கொண்டாடுவீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, மே 23 -

தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய வரும் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னணி மாநிலமாக மாற்றியவரும் மாணவர் நலன், பெண்கள் முன்னேற்றம், அரசு ஊழியர், ஆசிரியர்கள், தொழிலாளர் நலன்களில் தீவிர கவனம் செலுத்திய வரும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறையெடுத்து அமைப்புசாரா நல வாரியங்களை உருவாக்கியவரும், போக்குவரத்துக் கழகம், நுகர் பொருள் வாணிபக் கழகம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு தேயிலை வாரியம், தமிழ்நாடு சிமெண்ட் வாரியம், தமிழ்நாடு சர்க்கரை வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற பொதுத்துறைகளை உருவாக்கியவர்.

அரசு ஊழியர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு திட்டம் கொண்டு வந்தவர். ஓய்வூதிய பணிக் காலத்தை 30 ஆண்டுகளாக நிர்ண யித்தவர்.

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கியவர். மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை தந்தவர்.

மேதின நினைவுச் சின்னம் நிறுவியவர் என்று பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரார்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஜூன் 3 அன்று தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஆலை வாயில்கள், அலுவலக வளாகங்கள், அமைப்பு சாரா தொழிலாளர்கள் கூடும் இடங்களில் தொ.மு.ச. பேரவை கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்குவதோடு வாய்ப்புள்ள அமைப்புகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமாய் தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோவையில் 10-வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து படுகொலையா?

## கண்ணம்பாளையம் குளக்கரையில் சடலமாக மீட்பு! பொதுமக்கள் அதிர்ச்சி!

கோவை.மே.23-

கோவை மாவட்டம், சூலூர் அருகே 10 வயது சிறுமி கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு குளக்கரையில் வீசப்பட்ட சம்பவம் கொங்கு மண்டலம் முழுவதும் பெரும் பரபரப்பும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த சூலூர் போலீஸார், சம்பவ இடத்திற்கு சென்று உடலைக் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை சூலூர் அடுத்த கண்ணம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி நேற்று முன்தினம் மாலை தனது வீட்டின் அருகே விளையாடிக் கொண்டு இருந்த போது திடீரென காணாமல் போய் உள்ளார்.

சிறுமி வீடு திரும்பாததால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள், அக்கம், பக்கத்திலும் பல்வேறு இடங்களிலும் தேடிப் பார்த்து உள்ளனர். சிறுமி குறித்து எவ்வித தகவலும் கிடைக்காததால், பெரும் தவிப்புடன் தேடி வந்து உள்ளனர். இதனிடையே நேற்று காலை கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள குளக்கரை ஓரத்தில் சிறுமி மர்மமான முறையில் சடலமாகக் கிடப்பதைக் கண்டு அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இது குறித்து உடனடியாக சூலூர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப் பட்டது.

இந்த விவகாரத்தில் அதே பகுதியைச் சேர்ந்த இரு நபர்கள் மீது சந்தேகம் வலுத்து உள்ளதால், அவர்களைப் பிடிக்க தீவிர தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.05.2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் துணைச் செயலாளர்கள் முன்னிலையில், **கழகத் தலைவர்** அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்**

- ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-05-2026

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; அமைச்சர் பதவி கிடைக்காததால் சோக கீதம் வாசிக்கும் சண்முகம் அணி – என்ற தலைப்பில் அ.தி.மு.க.வைப் பற்றிச் செய்தி வெளியிட்டுள்ளார்களே?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; தினமலர் ஏடுதான் அப்படி செய்தி வெளியிட்டுள்ளது. “ அரசனை நம்பி, புருஷனைக் கை விட்டோமே” என்பதைக் கீதமாக இசைத்துக் கொண்டிருப்பார்களோ!**